பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 01 2025 **TUESDAY** 6 45 **AM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan** சந்தித்து இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவு குறித்து ஆலோசனை நடத்தினார்.

2. சர்வதேச காவல்துறை தகவல்களை ஒருங்கிணைக்கும் வகையிலான 'பாரத் போல்' என்ற இணையதளத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

3. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலிருந்து 14 ஆயிரத்து 104 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

4. **HMPV** தொற்று குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.

5. மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று கோலாலம்பூரில் தொடங்குகிறது.

>>>>>><<<<<<

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan,** புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

இந்தியா - அமெரிக்கா இடையே கடந்த நான்காண்டுகளாக நிலவும் உலகளாவிய நல்லுறவு பங்களிப்பின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

குறிப்பாக, தொழில்நுட்பம், பாதுகாப்பு, விண்வெளி, அணுசக்தி, பசுமை எரிசக்தி, செமிகண்டக்டர், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இந்தியா – அமெரிக்கா இடையேயான கூட்டுறவு தொடர்பாக இருவரும் விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன்-உடனான தமது சந்திப்புகளை நினைவுகூர்ந்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவர் இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஆற்றிய பணிகளுக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

சர்வதேச காவல்துறை தகவல்களை ஒருங்கிணைக்கும் வகையிலான 'பாரத் போல்' என்ற இணையதளத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ இந்த இணையதளத்தை வடிவமைத்துள்ளது.

சர்வதேச காவல்துறையான இண்டர்போல் மூலம், வரப்பெறும் கோரிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும், சிவப்பு நோட்டீஸ் மற்றும் இண்டர்போல் வழங்கும் பல்வேறு வகையான நோட்டீஸ்களையும் வழங்கும் வகையில் புதிய இணையதளம் இருக்கும் என்று சமூகவலைதளத்தில் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

விசாரணை அமைப்புகளுக்கு ' பாரத் போல்' இணையதளம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய புலனாய்வு அமைப்புகளை சர்வதேச அளவில் மேம்படுத்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் இந்த இணையதளம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டில் காசநோயை முற்றிலுமாக ஒழிக்க, மக்களின் தொடர் மற்றும் தீவிர பங்களிப்பு அவசியம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று காசநோய் குறித்த பிரச்சாசர இயக்க கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், இந்தியாவில் காசநோய் இல்லாத நிலையை உருவாக்க ஒருங்கிணைந்த 100 நாள் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் காசநோயை முற்றிலுமாக ஒழிக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உலக அளவில் வரும் 2030ஆம் ஆண்டிற்குள் இந்த நோயை ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும், இந்தியாவில் முன்கூட்டியே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை திரு. நட்டா சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

**HMPV** தொற்று குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.

இந்த தொற்று குறித்து மத்திய சுகாதாரத்துறை செயலாளர் தலைமையில் அனைத்து மாநில சுகாதாரத்துறை அதிகாரிகள் பங்கேற்ற காணொலி வாயிலான கூட்டம் நடைபெற்றதாகவும் அதில் தொடர்ந்து தொற்று பாதிப்பு குறித்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**HMPV** என்பது புதிய வகை தொற்றல்ல, கடந்த 2001ஆம் ஆண்டிலேயே முதல்முறையாக கண்டுபிடிக்கப்பட்டதாகவும், தமிழகத்தில் இதுவரை இரண்டு பேருக்கு இந்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள், தொடர் கண்காணிப்பில் உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழக அரசை பொறுத்தவரை, தீவிர கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டிருப்பதால், மக்கள் எவ்வித அச்சமோ பீதியோ அடையத் தேவையில்லை என்று அந்த செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி சென்னையில் நேற்று தொடங்கியது.

தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் 41 அரங்குகளும், கர்நாடக அரசின் சார்பில் ஒரு அரங்கும், மத்திய அரசின் இரண்டு அரங்குகளும் பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இந்த பொருட்காட்சி, வார நாட்களில் பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணிவரையிலும், சனி, ஞாயிறு  மற்றும் விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பெரியவர்களுக்கு 40 ரூபாயும், 4 முதல் 10 வயது வரையிலான சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கு தலா 25 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வரும் 10ஆம் தேதி முதல், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலிருந்து 14 ஆயிரத்து 104 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தெரவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளை காட்டிலும் கூடுதலாக 7 ஆயிரத்து 800 பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக கூறினார்.

பயணிகள் அரசு விரைவு போக்குவரத்துக் கழக அதிகாரப்பூர்வ செயலி, இணையதளம் மூலமாகவும் கிளாம்பாக்கம், கோயம்பேடு பேருந்து நிலையங்களில் உள்ள மையங்களிலும் பயணச்சீட்டுகளுக்கான முன்பதிவை செய்து கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த பேருந்துகள் கிளாம்பாக்கம், கோயம்பேடு மற்றும் மாதவரம் பேருந்து நிலையங்களிலிருந்து இயக்கப்படும் என்றும் ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது குறித்து புகார் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. சிவசங்கர் குறிப்பிட்டார்

(சவுண்ட்பைட் – சிவசங்கர் 33 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் வரும் 14ஆம் தேதி முதல் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளை இணையதளத்தில் பதிவு செய்யும் நடைமுறைகள் தொடங்கியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 52 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

கனடாவில் ஆளும் லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அந்நாட்டுப் பிரதமர் திரு. **Justin Trudeau** அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வடகொரியா, இந்த ஆண்டில் முதல்முறையாக நேற்று அணுஆயுதங்களுடன் கூடிய ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

>>>>>><<<<<<

இந்திய திரைப்பட விழா இலங்கை, தலைநகர் கொழும்புவில் நேற்று தொடங்கியது.

>>>>>><<<<<<

பல்கலைக் கழக மானியக் குழுவின் இந்த ஆண்டிற்கான கட்டுப்பாடு வரைவு அறிக்கையை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் நேற்று வெளியிட்டார்.

>>>>>><<<<<<

நடப்பாண்டிற்கான திருநங்கையர் விருதுக்கு நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியானவர்கள் அடுத்த மாதம் 10ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. உமா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் மருத்துவமனை மருத்துவர்களுக்கான மகப்பேறு மற்றும் தாய்சேய் நலம் குறித்த பயிற்சிப் பட்டறையை ஆட்சியர் திரு. பிரபு சங்கர் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தமிழக அரசின் புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான ஆடியோ புத்தக கருவியை வடிவமைத்த, காஞ்சிபுரம் மாவட்டம், கோவிந்தவாடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் நேற்று வழங்கினார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

கோலாலம்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென், எச்.எஸ் பிரணாய், பிரியன்சு ரஜாவத், ஆகர்ஷி காஷ்யப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த இணை, தாய்லாந்தின் **Ornnicha – Sukitta** இணையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

ஐஎல்எஸ் கால்பந்துப் போட்டியில், மும்பை அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 3-2 என்ற கோல்கணக்கில் மும்பை அணி வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியானாவின் சூர்மா அணி – தில்லி அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இரு அணிகளும் தலா 2 கோல் அடித்திருந்த நிலையில், பெனால்டி சூட்அவுட் முறையில் 3-1 என்ற கோல்கணக்கில் ஹரியானா அணி வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<